கண்டி
ஸ்ரீ மீனாட்சி உடனுறை
ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்



# தோத்திர திருப்பணிமாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி
# ஸ்ரீ மீனாட்சி உடனுறை
# ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர்
# ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்



# தோத்திர திருமணிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் திருமுறை

## திருஞான சம்பந்தர்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர் கொண் டடியார்தொழுவார்
புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்த அன்று
மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின்ற திரவெருவித்
தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல்
அண்ணாமலையாரே.

நன்றுடையானைத் தீயதிலானை
நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம்
உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்
சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங்
குளிரும்மே.

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் திருமுறை

## திருஞான சம்பந்தர்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மண்புகார் வான்புகுவர்
மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார்
கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா
வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந்
தலைவன்தாள் சார்ந்தாரே

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் திருமுறை
## திருஞான சம்பந்தர்
# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஆடி னாய்நறு நெய்யொடு
பால்தயிர் என்றெடுத் தார்வத்தால்
பாடி னார்பின்னும் அப்பதி
கத்தினிற் பரவிய பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை
யோர்தமைக் கண்டஅந் நிலையெல்லாம்
கூடு மாறுகோத்து அவர்தொழு
தேத்துசிற் றம்பலம் எனக்கூறி.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் திருமுறை

## திருநாவுக்கரசர்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கே
னென்னைநீ யிகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
யம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் னாடல் காண்பா
னடியனேன் வந்த வாறே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் திருமுறை
## திருநாவுக்கரசர்
# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

கங்கை யாடி லென்
காவிரி யாடி லென்
கொங்கு தன் குமரித்
துறை யாடி லென்
ஓங்கு மா கடல்
ஓத நீராடி லென்
எங்கு மீசன்
என் தவர்க் கில்லையே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் திருமுறை
## திருநாவுக்கரசர்
# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி
னோமே

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாவது திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயனார்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

குரும்பை முலை மலர்க் குழலி கொண்ட தவம் கண்டு,
குறிப்பினொடும் சென்றவள் தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பு வரங் கொடுத்தவளை வேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர் வினவில்
அரும்பருகே தரும் பருவ அறுபதம் பண் பாட,
அணி மயில்கள் நடமாடும் அணி பொழில் சூழ் அயலில்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங், கழனிக்
கமலங்கள் முகம் மலரும், கலய நல்லூர் காணே .

பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நாநமச்சி வாயவே.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை,
போகமும் திருவும் புணர்ப்பானை,
பின்னை என் பிழையைப் பொறுப்பானை,
பிழை எலாம் தவிரப் பணிப்பானை,
இன்ன தன்மையன் என்று அறிவு ஒண்ணா

எம்மானை, எளி வந்த பிரானை,
அன்னம் வைகும் வயல்-பழனத்து அணி
ஆரூரானை, மறக்கலும் ஆமே?

ஆலந்தானுகந் தழுது செய்தானை
ஆதியை அமரர் தொழ தேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப்பாரவார் சிந்தையுளானை
ஏலவார்குழலான் உமை நங்கை
எங்கும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்ற வாறே.


நத்தார் புடை ஞானன் பசு
ஏறிந் நனை கவுள் வாய்
மத்தம்மதயானை உரி
போர்த்த மழுவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு,
பாலாவியின் கரைமேல்,
செத்தார் எலும்பு அணிவான் --திருக்
கேதீச்சுரத்தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவார் கொன்றை மதிசூடி
   மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
   மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
   தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
   பெரிய பெருமா னடிகளே

மண்ணுல கிற்பிறந்து நும்மை
      வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட
      னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்
      பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்
      தான்மலை உத்தமனே

திருச்சிற்றம்பலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் திருமுறை

## மாணிக்கவாசகர்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி
வாய சயசய போற்றி போற்றி.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயனே மறி கடல் விட முண்ட
வானவாமணி கண்டெத் தெம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகுலாஞ்சடைப் பிஞ்சக னேயோ
சேயனாகிநின் றவறுவ தழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிசூழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

புற்றில்வாழ் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்கு
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே

புன் புலால் யாக்கை புரை புரை கனிய
பொன் னெடும் கோயிலாப் புகுந்து என்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நல் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருள்வது இனியே .

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது திருமுறை

## திருமாளிகைத் தேவர்

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசைய

## கருவூர் தேவர்

செங்கணா போற்றி ! திசைமுகா போற்றி !
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி ! அமரனே போற்றி !
அமரர்கள் தலைவனே போற்றி !
தங்கள்நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி ! ஏழ் இருக்கை
இறைவனே ! போற்றியே போற்றி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேந்தனர்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே

### புருடோத்தம நம்பி

தில்லையம்பலத் தெங்கள் தேவ தேனவத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லைய தாகிய எழில் கொள் சோதி
என்னுயிர் காவல்கொண்டிருந்த எந்தாய்
பல்லையார் பசுந்தலை யோடிடறிப்
பாதமென் மலரடி நோவ நீ போய்
அல்லினில் அருநட மாடில் எங்கள்
ஆருயிர் காவல் இங்கரிது தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்துருத்தி நம்பி காட நம்பி

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ(று)ம் அமுதம்ஒத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் ! இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆருர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே

## திருவாலியமுதனார்

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே

கூத்தனை வானவர்தங் கொழுந்
தைக்கொழுந் தாய்எழுந்த
மூத்தனை மூவுருவின் முத
லைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந்
தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற எம்
பிரான்அடி சேர்வன்கொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேந்தனார்
# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு)ஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திருப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்(கு)ஆட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாம்குழா மாய் நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சிவமயம்

**சேக்கிழார்**

# பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

ஆதியாய் நடுவும் ஆகி
அளவு இலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்
தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா வேத மாகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொது நடம் போற்றி போற்றி

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்.

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி

சொல்லுவ தறியேன்! வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையி லின்ப வெள்ள
மெனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி யென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.


செறிதருமுயிர் தொறுந்
திகழ்ந்து மண்ணிய.
மறுவறு மானிட
மரபின் மேவியே.
அறுவகை நெறிகளும்
பிறவு மாக்கிய.
இறைவிதன் மலரடி
இறைஞ்சி ஏத்துவோம்

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி
பூங் கழல்போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப் பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணகிரிய நாதர் அருளிய
# திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் ...... அடிபேணிக்

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ...... கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய ...... மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ...... முதல்வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த ...... அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ...... இபமாகி

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் ...... பெருமாளே.

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் ...... எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு ...... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு ...... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய ...... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற ...... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ...... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் ...... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ...... பெருமாளே.

பாதி மதிநதி போது மணிசடை நாத ரருளிய
.....குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய
...... மணவாளா
காது மொருவிழி காக முறஅருள் மாய னரிதிரு
...... மருகோனே
கால னெனையணு காம லுனதிரு காலில் வழிபட
...... அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல காளும் வகையுறு
...... சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள் சூழ வரவரு
...... மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு வாமி மலைதனி
...... லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட வேலை விடவல
...... பெருமாளே.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிய நாதர் அருளிய
# கந்தரலங்காரம்

## திருச்சிற்றம்பலம்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே.

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப்பார், மரிப் பார்வெறுங் கர்மிகளே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்றண்டைச் சிற்றடியை வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச் சந்திக் கிலேன்பொய்யை நிந்திக்கி லேலுண்மை சாதிக்கிலேன் புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன் காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில் வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனிவழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற் சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிய நாதர் அருளிய
# கந்தர் அநுபூதி

திருச்சிற்றம்பலம்

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே.

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.

கெடுவாய் மனனே கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான் முருகன், பிறவான், இறவான்,
சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே

முருகன், தனிவேல் முனி, நம் குரு என்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?
உரு அன்று, அரு அன்று, உ ளது அன்று, இலது
அன்று,
இருள் அன்று, ஔை அன்று, என நின்றதுவே.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்(று)
உ ய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்,
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசா மணியும் துகிலும்க புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம் துகளாயின பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே.

எந்தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்த்கது எனையாள்,
கந்தா கதிர்வேலவனே உ மையாள்
மைந்தா குமரா மறை நாயகனே

நாதா குமரா நமவென்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

உருவாய் அருவாய், உ ளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உ யிராய்க், கதியாய், விதியாய்க்,
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி பட்டர் அருளிய
# அபிராமி அந்தாதி

தாரமர் கொன்றையும் செண்பக மாலையும்
சாத்தும்தில்லை ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே!
உலகேழும் பெற்ற சீர் அபிராமி அந்தாதி எப்போதும்
எந்தன் சிந்தையுள்ளே காரமர் மேனிக் கணபதியே!
நிற்கக் கட்டுரையே.

1. உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே

2. அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே,. திருவே! வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத
கருமநெஞ்சால் மறிந்தே விழுநரகுக்கு உறவாய
மனிதரையே!

3. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
நினைப்பதுன்னை, என்றும் வணங்குவது
உன்மலர்த்தாள்! எழுதாமறையின் ஒன்றும் அரும்
பொருளே! அருளே! உமையே! இமயத்து அன்றும்
பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே!

4. கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம்,
கசிந்துபக்தி பண்ணியது உன் இரு பாதாம் புயத்தில்,
பகல் இரவா நண்ணியது உன்னை நயந்தோர்
அவையத்து. நான்முன்செய்த புண்ணியம் ஏது? என்
அம்மே! புவி ஏழையும் பூத்தவளே!

5. பூத்தவளே! புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்றோர் தெய்வம்
வந்திப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணிபுனைந்த அணியே, அணியும் அணிக்கழகே, அணுகாதவர்க்குப் பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே. பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

7. சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த்தாள் அல்லும் பகலும் தொழும் அவர்க்கே, அழியா அரசும் செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

8. நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து, நீயேநினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம் பேயேன் அறியும் அறிவுதந்தாய், என்ன பேறு பெற்றேன் தாயே, மலைமகளே செங்கண் மால்திரு தங்கைச்சியே.

9. தனம்தரும், கல்விதரும், ஒருநாளும் தளர்வறியா மனம்தரும், தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம்தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.

10. கண்களிக் கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில் பண்களிக் கும்குரல் வீணையும், கையும் பயோதரமும் மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப் பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

11. விழிக்கே அருளுண்டு, அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு, அவ்வழிகிடக்கப் பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து, பாழ்நரகக் குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம் எனக் குள்ளம்வெல்லாம் அன்றே உனதென் றளித்துவிட்டேடன். அழியாதகுணக் குன்றே, அருட்கடலே. இம வான்பெற்ற கோமளமே.

## நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை,
அண்டமெல்லாம் பூத்தாளை, மாதுளம்
பூநிறத்தாளை, புவி அடங்கக் காத்தாளை,
அங்குச பாசங்குசமும் கருப்பும் அங்கையிற்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கில்லையே.

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனையியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாதகோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்நின் பாதத்தில் அன்பும்உ தவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலுமாயனதுதங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியாழ்வார் அருளியது

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா
உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைப்போர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்
எற்றிநமன் தமர் பற்றும் போது
நில்லுமி னென்னும் உபாயமில்லை
நேமியும் சங்கமும் ஏந்தினானே
சொல்லலாம் போதே உன் நாம மெல்லாம்
சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும்
அல்லல்படா வண்ணம் காக்க வேண்டும்
அரங்கத்தரவணைப் பள்ளியானே

பையரவினனைப் பாற்கடலுள்
பள்ளிகொள்கின்ற பரமமூர்த்தி
உய்ய உலகு படைக்க வேண்டி
உந்தியில் தோற்றினாய் நான் முகனை
வைய மனிசரைப் பொய்யென்றெண்ணிக்
காலனையும் உடனே படைத்தாய்

ஐயா இனி என்னைக் காக்க வேண்டும்
அரங்கத்தரவணைப் பள்ளியானே.
எருத்துக் கொடி யுடையானும் பிரமனும் இந்திரனும், மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு
மருந்தறி வாருமில்லை
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா மறுபிறவி தவிரத்
திருத்தி உன் கோயிற்கடைப்புகப் பெய் திரு
மாலிருஞ்சோலை யெந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாச்சியார் திருமொழி

கற்பூரம் நாறுமோ
கமலப் பூ நாறுமோ
திருப்பவள செவ்வாய் தான்
தித்தித் திருக்குமோ
மருப் பொசித்த மாதவன் தன்
வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே

## குலசேகரப் பெருமான் திருமொழி

ஆணாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வாணாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையெனாவேனே

கம்ப மதயானை கழுத்தகத்தின் மேல் இருந்து
இன்பமுறும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன“
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடை யெனாவேனே

செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்

அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடத்தியங்கும்
படியாக கிடந்து உன் பவள வாய்க் காண்பேனே

பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாகப் பெருவேள்விக் குறைமுடிப்பான்
மறையானான்
வெறியார் தன் சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையெனாவேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டரடிப் பொடியாழ்வார்

பச்சை மாமலை போல் மேனி
பவள வாய் கமலச் செங்கன்
அச்சுதர அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

மற்றுமோர் தெய்வ முண்டோ
மதியிலா மானிடங்காள்
உற்றபோ தன்றி நீங்கள்

ஒருவனென்றும் உணர மாட்டீர்
அற்றமே வொன்றறியீர்
அவனல்லால் தெய்வ மில்லை
கற்றினம் மேய்த்த எந்தை
கழலினை பனிமின்நீரே.

நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோரருள் தன்னாலே
காட்டினான் திருவரங்கம்
உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டீரே நம்பிமீர்காள்
கெருடவாகனனும் நிற்க
சேட்டை தன் மடியகத்துச்
செல்வம் பார்த் திருக்கின்றீரே

வண்டினம் முரலும் சோலை
மயிலினம் ஆளும் சோலை
கொண்டல் மீதணவும் சோலை
குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை
மிண்டர் பாய்ந்துண்ணும்
சோற்றை விலக்கி நாய்க கிடுமினீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி திருவரங்க மென்னா
மிண்டர் பாய்ந்துண்ணும்
சோற்றை விலக்கி நாய்க கிடுமினீரே

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி
கடல் நிறக் கடவுளெந்தை

அரவணைத் துயிலுமா கண்டு
உடனேக்கு உருகுமாலோ
என் செய்தேன் உலகத்தீரே

பாயு நீரரங்கந் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்பும்
மரகதவுருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும்
துவரிதழ்ப்பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும்
அடி யோர்க்கு அகலலாமே

## திருப்பாணாழ்வார் அருளியது

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன்
என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோண் அணியரங்கன் - என்
அமுதனைக் கண்டகண்கள் மற்றொன்
றிணைக்காணாவே

ஊரிலேன் காணியில்லை
உறவு மற்றெருவரில்லை
பாரில் நின் பாத மூலம்
பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே
கண்ணணே கூறுகின்றேன்
ஆருளாகளைகன் அம்மா
அரங்கமா நகருள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரகவியாழ்வார் அருளியது

கண்ணி நுண் நிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே

பாவினால் நவிற்று இன்பமெய்தினேன்
மேவினேன் அவன்பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி
பரவினின்னிசை பாடித்திரிவனே

## திருமங்கையாழ்வார் அருளியது

குலம் தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள் விசும் பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உய்யதோர் பொருளால்
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து

நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா வெனும் நாமம்

தாயே தந்தை யென்னும் தாரமே கிளைமக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன், உன்னைக் காண்பதோர் ஆசையினால்
வேயேம் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆளென்னைக் கொண்டருளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோற்றேன் பல்பிறவி உன்னைக் காண்பதோர் ஆசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான்
கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர் சோலை
சூழ் வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனே ஆட்கொண்டருளே

பற்றேல் ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவி யானேன்
மற்றேல் ஒன்றறியேன் மாயனே எங்கள் மாதவனே
கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச் சுனை வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே

ஐயனருள் மாரி செய்ய
அடியினைகள் வாழியே
அந்துகிலும் சீராவும் மணியரையும் வாழியே
மையிலகி வேலனைத்த வன்மை மிகு வாழியே
மாராமல் அஞ்சலி செய் மலர்க் கரங்கள் வாழியே
செய்ய கலனுடலைங்கல் சேர் மார்பும் வாழியே
திண்புயமும் பணிலமன்ன திருக்கழுத்தும் வாழியே
மைய செய்யும் முகமுறுவல் மலர்க் கண்கள் வாழியே
மன்னு முடித் தொப்பாரம் ழையமுடன் வாழியே

ஊனிடை சுவர் வைத்து என்பு தூண் நாட்டி
உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும் போது உன்தன்
சரணமே சரணமென்றிருந்தேன்
தேனுடைக் கமலத் திருவினுக் கரசே
திரை கொள் மா நெடுங்கடல் கிடந்தாய்
நானுடைத் தவத்தால் திருவடி யடைந்தேன்
நைமி சாரணியத்துள் எந்தாய்

## பொய்கையாழ்வார் அருளியது

வையம் தகளியா - வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியானடிக்கே ஆட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே யென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூதத்தாழ்வார் அருளியது

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியாக நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

அடிமூன்றில் இவ்வுலகம்
அன்று அளந்தாய் போலும்
அடிமூன்றிரந்து அவனிகொண்டாய் - படிநின்ற
நீரோதமேனி நெடுமாலே , நின்னடியை
யாரோத வல்லார் அறிந்து

## பேயாழ்வார் அருளியது

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் - திகழும்
அருக்கனனி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று

மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் - மலரான்
தனத்துள்ளான் தன்துழாய் மார்பன் - சினத்தால்
செருநருகச் சென்று கந்த தேங்கோதவண்ணன்
வருநரகம் தீர்க்கும் மருந்து

நாமம் பல சொல்லி நாராயணா வென்று
நாமங்கையால் தொழுதும் நன்னெஞ்சே வாமருவி
மண்ணுலகமுண்டு மிந்த வண்டறையும் தன் துழாய்
கண்ணனையே காண்தநங்கன்.

வாய்மொழிந்து வாமன்னாய் மாவலிபால் மூலடிமண்
நீயளைந்து கொண்ட நெடுமாலே - தாவிய நின்
எஞ்சா இணையடிக்கே ஏழ்பிறப்பும் ஆளாகி
அஞ்சா திருக்க அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமிழிசையாழ்வார் அருளியது

நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ
விலங்கு மால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்
கரை குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து
பேசு வாழிகேசனே.

## நம்மாழ்வார் அருளியது

கங்குலும் பகலும் கண் துயிலறியான்
கண்ண நீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு என்னும்
இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல்பாய் நீர்த்திருவரங்கத்தாய்
இவன் திறந்து என் செய்கின்றாயே ?

யானும் தானா யொளிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிக் பணைத்த தனி முதலை
தேனும் பாலும் கன்னலும்
அமுதுமாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்விலில்
நின்ற வொன்றை யுணர்ந்தேனே

## வாழி விருத்தம்

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல்வாழ கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஆழ்வார் திருவடி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org